முக்கிய வார்த்தைகள்:
*சுன்னாஹ்*
*ஹதீத்*
*வாழ்க்கை*
*உயிர்ப்பிப்பது*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**19 செப்டம்பர் 2025 / 26 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1447**

# <u>சுன்னாஹ் எனும் வழிமுறையும் சொர்க்கவாசிகளும்</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِٱلْهُدَى وَدِينِ ٱلْحَقِّ لِيُظْهِرَهُ عَلَى ٱلدِّينِ كُلِّهِ وَكَفَىٰ بِٱللَّهِ شَهِيدًا. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ نَبِيَّنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللهِ، ٱتَّقُوا ٱللهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيْلِ: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நம்மிடமுள்ள "தக்வா" [இறை பக்தி] நேரான வழியின் பால் நமக்கு வழிகாட்டட்டுமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் தடுத்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** எனும் வழிமுறையைப் பின்பற்றுவதன் மூலம், நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வோமாக! அதன் மூலம் ஓரிறை நம்பிக்கை எனும் மாலையால் நமது ஆன்மாக்கள் அலங்கரிக்கப்படட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் அடிச்சுவடுகளை எப்படி நாம் பின்பற்றுவது? அவர்களின் போதனைகளைக் கற்றுக் கொண்டு, அவற்றில் நம்பிக்கைக் கொண்டால் போதுமாகுமா?

நிச்சயம் இல்லை. இறைத்தூதர்[ஸல்] அவர்களை ஆர்வத்துடன் பின்பற்றுவதென்பது, அவர்களின் போதனைகளில் நம்பிக்கைக் கொள்வது என்பது மட்டுமல்ல. அதையும் கடந்து, அவர்களின் **சுன்னாஹ்** எனும் வழிமுறையைப் பின்பற்றுவதாகும். அவர்களின் போதனைகள், வழிகாட்டுதல்கள், நற்குணம் மற்றும் நன்னடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ள **சுன்னாஹ்** எனும் வழிமுறையை உயிர்ப்பிப்பதாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஆலி இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 31-வது வசனத்தில் கூறுகிறான்:

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ
وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣١﴾

பொருள்: "[நபியே!] நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால் என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை மன்னிப்பான்; மேலும் அல்லாஹ் அதிகம் மன்னிப்பவனாகவும் மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்"

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, ஒரு மிகச் சிறந்த உண்மையை நமக்குப் போதிக்கின்றது. "நாம் அல்லாஹ்வை உண்மையாகவே நேசிப்பவர்களாக இருந்தால், முதலில் இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களை நாம் ஆர்வத்துடன் பின்பற்றுவது அவசியமாகும். அதற்குப் பகரமாக, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, தனது கிருபையையும், நமது பாவங்களுக்கு மன்னிப்பையும் வழங்குவான்" எனக் கூறுகிறது.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களைப் பின்பற்றுபவர்கள் எனும் ரீதியில், நாம் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கின்றோம். காரணம், **சுன்னாஹ்** எனும் அவர்களின் வழிமுறை இன்று வரை உயிரோட்டத்துடன் காணப்படுகிறது. பல தலைமுறைகளில் காணப்பட்ட அறிஞர்களின் முயற்சிகளால் தொடர்ந்து அது பாதுகாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, இமாம் புகாரி [ரஹ்] அவர்கள், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் ஹதீதைக் கோர்வை செய்வதற்காக தொலை தூர நாடுகளுக்குச் சென்று, தனது வாழ்நாளை அர்ப்பணித்தார்கள். அவர்கள் இவ்விஷயத்தில் எந்த அளவுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்றால், ஒவ்வொரு ஹதீதையும் தனது "ஸஹீஹ் அல்-புகாரி" யில் பதிவு செய்வதற்கு முன்பாக இரண்டு "ரக்அத்" தொழுபவர்களாக இருந்தார்கள். இந்த அளவுக்கு அவர்கள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதற்கு என்ன காரணம்?

இமாம் புகாரி [ரஹ்] போன்ற அறிஞர்கள், **ஹதீதும்** இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** வும் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அவை காலம் கடந்து வாழ்ந்து வரும் மரபுரிமைச் சொத்து என அறிந்திருந் தார்கள். இறைத்தூதர்[ஸல்] அவர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பை நாம் பெற்றிருக்கவில்லையென்றாலும், அவர்களின் **சுன்னாஹ்** எனும் வழிமுறையாகிறது, ஒருபோதும் மங்காத கலங்கரை விளக்கத்தைப் போன்று, ஆன்மாக்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டுவதாக உள்ளது.

எனவே, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** எனும் மரபுரிமைச் சொத்து விஷயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமெனச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இன்றைய "குத்பா" பிரசங்கமானது, நமது அன்றாட வாழ்க்கையில் "சுன்னாஹ்" வை பிரகாசிக்கச் செய்வதற்கு இரண்டு வழிமுறைகளை வழங்க இருக்கின்றது.

**முதலாவதாக: சுன்னாஹ்** வின் **செயல்பாடுகளில் எவை நிறைவேற்றுவதற்கு எளிதானவை என்பதை அறிதல்**

நாம் **சுன்னாஹ்** வின் செயல்பாடுகளில், முதலில், எளிதானச் செயல்பாடுகளைச் செயல்படுத்த வேண்டும்; அப்போதுதான், அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துவது நமக்கு எளிதாக இருக்கும். அவற்றில் ஒன்று, "**அல்-அத்கார்**" "**ஹிஸ்னுல் முஸ்லிம்**" போன்ற புத்தகங்களில் கோர்வை செய்யப்பட்டுள்ள துஆக்களை அன்றாடம் ஓதி வருவதாகும். தூங்கி எழுந்த பின்பு, சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும், பள்ளிவாசல் அல்லது வீடுகளில் நுழையும் போதும், வெளியில் வரும் போதும், இரவில் தூங்குவதற்கு முன்பாக போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் ஓத வேண்டிய துஆக்களை ஹதீதின் ஆதாரத்துடன் இந்நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் வீட்டை விட்டு வெளியேறும் போது பின்வரும் துஆவை ஓதி வந்தார்கள்:

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ أَنْ أَضِلَّ أَوْ أُضَلَّ، أَوْ أَزِلَّ أَوْ أُزَلَّ، أَوْ أَظْلِمَ أَوْ أُظْلَمَ، أَوْ أَجْهَلَ أَوْ يُجْهَلَ عَلَيَّ

பொருள்: "யா அல்லாஹ்! நான் வழிகெட்டுப் போவதை விட்டும் அல்லது மற்றவர்களால் வழிகெடுக்கப்படுவதை விட்டும், நான் [நேரானப் பாதையிலிருந்து] நழுவி விடுவதை விட்டும் அல்லது மற்றவர்கள் நழுவுவதற்குக் காரணமாக ஆகுவதை விட்டும், நான் அநீதம் செய்வதை விட்டும் அல்லது மற்றவர்களால் அநீதம் செய்யப்படுவதை விட்டும், நான் அறியாதவனாக செயல்படுவதை விட்டும் அல்லது அறியாமை என் மீது செயல்படுத்தப்படுவதை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவூத் ரஹ்]

இது போன்ற துஆக்களை நாம் ஓதுவதன் மூலம், தொடர்ந்து நாம் அல்லாஹ்வுடன் தொடர்பு உடையவர்களாகவும், அதே சமயம்,

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** வைப் பின்பற்றியவர்களாகவும் ஆகலாம்.

நாம் கடமையானச் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துபவர்களாக இருப்பதன் காரணமாக, **சுன்னாஹ்** வைச் செயல்படுத்துவதில் ஆர்வமற்றவர்களாக இருந்தால் பின்வரும் விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்; அதாவது, நமது கடமையானச் செயல்பாடுகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் குறைபாடுகளை, **சுன்னாஹ்** வின் செயல்பாடுகள் போக்கி, அவற்றை நிறைவு செய்வதாக இருக்கும்; உதாரணமாக, ஃபர்ளானத் தொழுகைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் குறைபாடுகளை, சுன்னத் தொழுகைகள் போக்கி, அவற்றைப் பரிபூரணமானவையாக ஆக்கி விடும்.

நமது பிள்ளைகளுக்கு, அவர்களின் இளமைப் பருவத்திலேயே **சுன்னாஹ்** வைச் செயல்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும்; அவர்கள் **சுன்னாஹ்** வின் சாதாரணச் செயல்பாடுகளைச் செயல்படுத்த ஆரம்பிப்பதன் மூலம் **சுன்னாஹ்** வின் சிறப்பை அறிய வேண்டும்; அதன் மூலம் அவர்கள் இறைத்தூதர்[ஸல்] அவர்களை அறிந்து, அவர்கள் மீது அன்பு கொள்ள வேண்டும்.

**இரண்டாவதாக: "சுன்னாஹ்" வை நமது அன்றாட வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்துக் கொள்வது**

இறைத்தூதர் முஹம்மது [ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** என்பது வணக்க, வழிபாடுகளுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல, மாறாக, அத்துடன், நற்குணம், நல்ல பேச்சுகள், குடும்பத்தார்கள், தோழர்கள், மற்றும் சமுதாய மக்கள் அனைவருடனான சீரான உறவுகள் ஆகிய அனைத்தையும் அது உள்ளடக்கியதாகும்.

திங்கள் கிழமைகள் மற்றும் வியாழக்கிழமைகளில் நோன்பு நோற்பதும், தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதும் சுன்னத்தான செயல்பாடுகள் ஆகும். அவற்றை நிறைவேற்றுவது வரவேற்கத்தக்கதாகும். அதே சமயம்,

மற்றவர்களின் நலன் நாடுதல், இன்முகத்துடன் மற்றவர்களுக்கு ஸலாம் கூறுதல், பணிவுடன் அடக்கமாக இருப்பது, மற்றவர்களுடன் பழகும் போதும் கொடுக்கல், வாங்குதல் செய்து கொள்ளும் போதும் பொறுமையைக் கடைப்பிடிப்பது ஆகியவையும் **சுன்னாஹ்** ஆகும்.

ஒருவர், **சுன்னாஹ்** வை உண்மையாகவே செயல்படுத்துபவராக இருந்தால், அது அவரது வாழ்க்கையில் சமநிலையையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும். அவர் தனது நேரத்தைச் சரியாக நிர்வகிப்பவராக இருப்பார்; மரியாதையுடன் நடந்து கொள்வார்; மற்றவர்களுக்குக் கிருபை காட்டுவார்; தனது உடல் நலனைப் பாதுகாப்பதில் விழிப்புணர்வுடன் இருப்பார்.

குதிரைச் சவாரி செய்தல், வில்வித்தை, நீந்தும் பயிற்சி ஆகியவை இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** வின் பகுதியாக இருக்கவில்லையா? எனவே, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** வைப் பின்பற்ற வேண்டுமென்ற நோக்கிலும், நமது உடல் நலனுக்காகவும் நாம் உடற்பயிற்சிகளைச் செய்தாலும், அல்லாஹ்வினால் நாம் வெகுமதிகள் வழங்கப்படுவோம்.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
"நான் இரண்டு விஷயங்களை உங்களிடம் விட்டுச் செல்கிறேன்; அவற்றை நீங்கள் பற்றிப் பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவற மாட்டீர்கள்; ஒன்று, இறை வேதமாகிய திருக்குர்ஆன்; மற்றொன்று, அவனது தூதரின் **சுன்னாஹ்** எனும் வழிமுறை" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் மாலிக் ரஹ்]

எனவே, நாம் ஒருநாள் சொர்க்கத்தில் வசிக்கும் மக்களாக ஆகுவோம் எனும் எதிர்ப்பார்ப்பில், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் **சுன்னாஹ்** வை நாம் அனைவரும் இணைந்து செயல்படுத்துவோமாக!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு வழிகாட்டுவானாக! இறைத்தூதர்[ஸல்] அவர்களை ஆர்வத்துடன் பின்பற்றுவதில் நிலைத்து நிற்கச் செய்வானாக! நமது உள்ளங்களை **சுன்னாஹ்** வின் அன்பால் நிரப்புவானாக! இம்மையிலும் மறுமையிலும் நாம் வெற்றி பெறுவதற்கு அதனைக் காரணமாக ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

**இரண்டாவது பிரசங்கம்**

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.